# ஸ்ரீ ஹனுமான்

(Sri Hanuman (Spiritual Knowledge) - Tamil)

## ஹனுமான் சம்பந்தமான ஞானத்தின் மஹத்துவம்

ஆன்மீக முன்னேற்றத்திற்கான பாதையின் தேர்வு பிண்டத்தில் துவங்கி ப்ரம்மாண்டத்தில் முடிவடைய வேண்டும். அதாவது, ஒரு ஜீவன் மிக உயர்ந்த நிலையில் உள்ள ப்ரப்ரம்மத்தின் தத்துவத்தை தனக்குள் ஐக்கியப்படுத்திக் கொள்வதன் மூலம் பரப்ரம்மத்துடன் ஒன்ற முடியும். ஒரு சொட்டேனும் எண்ணெய் கலந்த நீர் எப்படி தண்ணீருடன் சேர முடியாதோ அப்படியே பக்தன் தன்னை முழுமையாக்கி மாருதியின் கல்யாண குணங்களிடம் ஐக்கியப்படுத்திக் கொண்டால் ஒழிய, அவன் சாயுஜ்ய முக்தியை அடைய முடியாது. மாருதியின் கல்யாண குணங்களை விளக்கும் இந்நூல் ஸாதகர்களுக்கு வழிகாட்டியாக அமையும்.

## ஸனாதனின் ஸாதகர்களுக்கு ஈச்வர க்ருபையால் கிடைக்கும் திவ்ய ஞானம்!

ஈச்வர க்ருபையாலும் ப.பூ. டாக்டர் ஜயந்த் ஆடவலேஜியின் ஸங்கல்ப சக்தியாலும் 2003-லிருந்து ஸனாதன் ஸன்ஸ்தாவின் சில ஸாதகர்களுக்கு திவ்ய ஞானம் கிடைத்து வருகிறது. குருதத்துவம், ப்ரம்ம தத்துவம், ப்ரம்மரிஷி, ஸூட்சும உலகின் 'வித்வான்', மூலமாக ஈச்வர் ஞானத்தை வழங்குகிறார்.

## இந்த கையேடு சம்பந்தமாக கிடைத்த திவ்ய ஞானம்!

ஹனுமானின் குணவிசேஷங்களைக் கூறி அதன் மூலம் சமூகம் மற்றும் சுற்றுப்புற சூழலை தூய்மைப்படுத்தும் ப.பூ. டாக்டர்ஜியின் அரிய கையேடு! - ஸூட்சும உலகின் 'ஒரு வித்வான்'

1. கர்மம், பக்தியோடு இயைந்திருக்க வேண்டும் என்பதைக் கற்றுத் தரும் தத்துவம் : 'வெறும் கர்மத்தைச் செய்வதால் பயன் இல்லை, ஒவ்வொரு கர்மாவும் பக்திபூர்வமாக செய்ய வேண்டும் என்பது ஹனுமானின் பக்தி யிலிருந்து கண்கூடாகத் தெரிகிறது.

2. 'ஹனுமான்' கையேட்டினால் பலர், ஸாதனை செய்ய ஊக்கம் பெறுதல் : 'ஹனுமான்' கையேட்டில், ப.பூ. டாக்டர் பக்திபூர்வ காரியத்தின் மஹத்துவத்தை உணர்த்தி அதுபோல் ஸாதனை செய்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியுள்ளார். ஒவ்வொரு மனிதனும் அவரவர் இயல்பின்படி உபாஸனை செய்கின்றனர். ஆனால் தெய்வ தத்துவங்களின் உள்ளார்ந்த மஹத் துவமும் அவர்களின் காரியங்களின்

ॐ ॐ

மஹத்துவமும் தெரிய வரும்போது உபாஸகரின் பக்திபாவம் மேலிடுகிறது. அதோடு தெய்வங்களின் மீது நம்பிக்கையும் ச்ரத்தையும் ஏற்பட உதவுகிறது. ஒருமுக உபாஸனையால் மட்டுமே அந்த உபாஸ்ய தத்துவத்தின் அதிக பலன் கிட்டுகிறது. இந்த நூலைப் படித்து பலர், ஸாதனை செய்ய ஊக்கம் பெற வேண்டும் என்பதே இந்நூலை எழுதியதன் நோக்கம். சாஸ்திரத்தை ஆதாரமாகக் கொண்டு இந்நூலின் சிந்தனை அமைந்திருப்பதால் இது ஸத்யம் நிறைந்ததாகிறது. இந்த சிந்தனையே சைதன்ய நிலையில் வாயுமண்டலத்தை தூய்மையாக்குகிறது. வாயுமண்டலத்தின் தூய்மையால் பல ஜீவன்கள் ஸாதனை செய்ய ஆரம்பிக்கின்றன. ப.பூ. டாக்டர்ஜியின் மூலம்

ॐ ॐ

எழுதப்பட்ட இந்த நூலின் உண்மையான பலன் இதுதான்.

**3. ப.பூ. டாக்டர்ஜி மூலமாக எழுதப்பட்ட நூல்களின் மஹத்துவம் :**

பல நூல்களில் நிறைந்திருக்கும் தெய்வங்களின் சிறப்பம்சங்களின் குறிப்புகள் மற்றும் ஸாதனை சம்பந்தமான விஷயங்கள், வெளிப்படாத நிலையில் வாயுமண்டலத்தை தொடர்ந்து தூய்மைப்படுத்துவதால், தானே காலசக்கரம் அனுகூலமாக மாறி 'ஹிந்து ராஜ்யம்' ஸ்தாபனம் ஆவது சுலபமாகிறது.'

- ஒரு வித்வான் (பூஜ்ய (திருமதி) அஞ்சலி காட்கில் மூலமாக

அச்வினி சுக்ல 1, கலியுக வருடம் 5113, (28.9.2011) காலை 7.55)